வெளியீடு எண். 504.

உ

சிவமயம்

திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனர்

அருளிச்செய்த

திருக்களிற்றுப்படியார்

(உரைநடையுடன்)

தருமையாதீனம்]   [அடக்கவிலை 0—65

1978



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்



ஸ்ரீ காசி விசுவநாதர் திருக்கோயில் கோபுர வடிவில் அமைந்த
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருமூர்த்த ஆலய விமானம்

வெளியீடு எண் 504.

உ
சிவமயம்

திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனுர்
அருளிச்செய்த

திருக்களிற்றுப்படியார்

[உரைநடையுடன்]

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்வண்ணம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

ஏழாவது ஆண்டுக் குருபூஜை விழா மலராக

"ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்"

வெளியிடப்பெற்றது.

தருமையாதீனம்

25—10—78



ஸ்ரீ காசி விசுவநாதர் திருக்கோயில் கோபுர வடிவில் அமைந்த
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருமூர்த்த ஆலய விமானம்

வெளியீடு எண் 504.

உ
சிவமயம்

திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனர்
அருளிச்செய்த

திருக்களிற்றுப்படியார்

[உரைநடையுடன்]

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனக்
26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்வண்ணம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

ஏழாவது ஆண்டுக் குருபூஜை விழா மலராக

" ஞானசம்பந்தம் பதிப்பகத்தில் "
வெளியிடப்பெற்றது.

தருமையாதீனம்

25—10—78

முதற்பதிப்பு 1961
இரண்டாம் பதிப்பு 1978

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

73-2

உ

சிவமயம்

முன்னுரை

நூலாசிரியர் :

சைவசித்தாந்த ஞான சாத்திரங்கள் பதினான்கனுள் இரண்டாவதாகத் திகழ்வது திருக்களிற்றுப்படியார். இந்நூலின் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார். இவர் திருவுந்தியார் அருளிய திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரின் மாணவராகிய ஆளுடைய தேவநாயனாரின் மாணவர். ஞான சந்தானத்தில் பெயரர் என்ற முறையில் முதல்நூலாசிரியரின் பெயரே இவருக்கும் தீட்சாநாமமாக இடம்பெற்றுள்ளது.

நூற்பெயர்க்காரணம் :

திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார் தம்மை அடைந்த பக்குவம் உள்ள மாணவர் ஒருவர்பொருட்டு இந்நூலை அருளிச் செய்துள்ளார். இந்நூலின் பெருமையை உலகம் உணர்ந்து உய்தற்பொருட்டு, தில்லையில் நடராசப்பெருமான், தமது கனக சபையில் உள்ள திருக்களிற்றுப்படியில் (பஞ்சாக்ஷரப்படியில்) இந்நூலை இவ்வாசிரியர் வைக்கப்புகும்பொழுது, அதில் உள்ள களிறு தனது துதிக்கையை நீட்டி வாங்கித் தமது திருவடியில் வைக்கச் செய்தருளினார். இக்காரணம்பற்றியே இந்நூலுக்குத் திருக்களிற்றுப்படியார் என்பது பெயராயிற்று.

இந்நூல் இதன் முதல்நூலாகிய திருவுந்தியாரின் விளக்க நூல் என்று கூறலாம். திருவுந்தியார் 45 கலித்தாழிசைகளால் அமைந்தது. திருக்களிற்றுப்படியார் நூறு அழகிய வெண்பாக்களால் ஆக்கப்பெற்றுள்ளது. பிற்காலத்து ஆன்றோர் செய்த ஒருவெண்பாவும், சிறப்புப்பாயிரப் பாடல் ஒன்றும் இறுதியில் உள்ளன.

சிறப்புப்பாயிரப்பாடல் இத்திருநூலை அருளிய திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார் பொருள், மனை, போகம், புலன், கருவி, கரணம், காலம், கலை, தருமம், தவம் ஆகிய அனைத்தையும் மறந்து உருகி உருகித் தற்பரத்தோடு ஒருநீர்மையாகி விட்டார் என்று சிறப்பித்துக்கூறுகிறது.

உள்ளுறை :

இந்நூல், தொடக்கத்தில் ஞானாசிரியரது பெருமையை எடுத்துக்கூறி, பின்பு சிவஞானிகளின் கருவி கரணங்கள் பதி கரணங்களாக விளங்குதல், அவர்கள் இயற்றிய அற்புதச்செயல்கள், சிவதன்மம் சிவயோகம் சிவஞானம் ஆகியவற்றின் விளக்கம், மெல்வினை வல்வினைகள், ஆதார நிராதார யோகங்கள், பெத்தம் முத்தி இரண்டிலும் ஆன்மாக்களை இறைவன் ஈடேற்றுதல், சிவஞானிகளின் பெருமை, சிவஞானிகள் திருவருளால் செய்த அற்புதச் செயல்கள், சிவபெருமானின் சிறப்பியல்பு, ஊனக்கண்ணால் இறைவனை அறியவொண்ணாமை, பாசநீக்கம், சிவப்பேறு, பரமுத்தி, அணைந்தோர் தன்மை, பல்வேறு சமய தத்துவ நுண்பொருள்கள், வேதாந்த மகாவாக்கியப் பொருள், அத்துவித உண்மை முதலியவைகளைக் கூறுகின்றது.

இந்நூல் உவமைகளை எடுத்துக்காட்டிக் கருத்துக்களை விளக்குவதை 6, 7, 11, 18, 32, 75, 77, 79,

87, 90 ஆம் பாடல்களால் நன்கு அறியலாகும். திருக்குறளை மேற்கோள் காட்டிக் கூறும் பாடல்கள் 30, 34, 40 என்ற எண்ணுள்ளன ஆகும்.

ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், சிறுத்தொண்டர், சண்டேசுரர், அரிவாட்டாயர், திருக்குறிப்புத் தொண்டர், ஏயர்கோன் கலிக்காமர், மூர்த்தியார், மூர்க்கர், கண்ணப்பர், மங்கையர்க்கரசியார் முதலியோரும் ; மணிவாசகர் சேந்தனர் ஆகியோரும் இந்நூலில் குறிக்கப்பெற்றுள்ளனர்.

மெய்கண்டநூல்கள் உரைநடை :

செய்யுள் வடிவில் அமைந்த மெய்கண்டநூல்கள் பதினான்கையும் எளிய முறையில் உரைநடைப்படுத்தித் தமிழுலகிற்கு வழங்கியவர் சித்தாந்தப்பேரறிஞர் பேராசிரியர் திரு. கா. சுப்பிரமணியப்பிள்ளை எம். ஏ., எம். எல். அவர்கள் ஆவார். தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாட்சிக்காலத்தில் பேராசிரியர் பிள்ளை அவர்கள் இந்நூலைத் தருமையாதீனத்துக்கு உரிமையாக்கினர். 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இவ்வுரைநடை நூல்களை மூலங்களோடு தனித்தனியே பல விழாக்களில் வெளியிட்டுச் சமய உலகிற்கு வழங்கினர்கள்.

ஞானசம்பந்தம் பதிப்பகம் :

தருமையாதீன ஞானபீடத்தில் இதுபொழுது 26 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளிவிளங்கும் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ஆதீன வெளியீடுகள் பலவும் எப்போதும் எல்லோரும் பெற்றுப்படிக்கும்வகையிலும்

நூல்கள் தட்டின்றிக் கிடைக்கும் வகையிலும் 'ஞானசம்பந்தம் பதிப்பகம்' என்ற பெயரில் அறக்கட்டளை அமைத்துச் சமய – இலக்கியநூல்கள்பலவற்றையும் அவ்வப்போது வெளியிட்டருளி வருகின்றார்கள். இதுபொழுது இவர்கள் திருவுள்ளப்பாங்கின் வண்ணம் திருக்களிற்றுப்படியார் உரைநடையுடன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் ஏழாவது ஆண்டுக் குருபூஜை விழாமலராக இரண்டாவது பதிப்பு வெளிவருகிறது.

அன்பர்கள், இத்தகைய அருட்பணிகள் பலவற்றையும் ஆற்றி மெய்கண்டார் திருமரபை விளங்கச்செய்தருளும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளைப் போற்றி, இந்நூலைப் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக.

இங்ஙனம்,

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்

உத்தரவுப்படி,

தருமபுரம்,
24—10—'78. } வித்துவான். இராமலிங்கத் தம்பிரான்.

சிவமயம்

தருமையாதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரை ஆள அவர்போல் வந்த
சைவசிகாமணி எவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடிய பொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்கண்ணுளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவிவாழ்வாம்.

— சம்பந்த சரணாலயர்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் குலத்தில் சுப்பிரமணிய பிள்ளைக்கும் மீனாட்சியம்மைக்கும் அருந்தவ மகவாக அவதரித்தார் ஸ்ரீ குருஞானசம்பந்தர். மதுரையம் பதிக்குத் தம் பெற்றோருடன் சென்று குல தெய்வமாகிய ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டார். திருவருளால், பொற்றாமரைக் குளத்தின் ஈசானமூலையில் பெட்டகக்கோயிலுடன் சொக்கநாதர் கண்ணுக்கினிய பொருளாகக் கைவரப்பெற்றார். சொக்கேசன் அருளால் திருவாரூர் சென்று ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகரை வணங்கிச் சிவஞானோபதேசம் பெற்றார். சொக்கநாதர்பூசையும்

எழுந்தருளச் செய்துகொடுக்கப்பெற்ருர். குருவாணைப்படியே தருமபுரத்தில் அமர்ந்து பக்குவான்மாக்களுக்கு ஞானேபதேசஞ் செய்து சைவ சித்தாந்தத்தை எங்கும் பரவச்செய்தார். தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதர்மீது சொக்கநாத வெண்பா பாடித் துதித்தார். சிவபோகசாரம், முத்திநிச்சயம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை, சோடசகலாப் பிராசாத சட்கம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், நவரத்தினமாலை ஆகிய நூல்களையும் அருளிச்செய்தார்.

இவ்வாறு, பல்லாண்டுகாலம் ஞான அரசாட்சி புரிந்து சிவலிங்கத் திருவுருவின்கீழ் ஜீவசமாதி கூடினர் ஸ்ரீ குருஞான சம்பந்தர். அவர் ஜீவசமாதிகூடிய குருமூர்த்தமே தற்பொழுது ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக விளங்கிவருகிறது. கி. பி. 16 ஆம் நூற்றுண்டில் ஸ்ரீ குரு ஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்ற இத் தருமையாதீனம் மொழித் தொண்டும் சமயத் தொண்டும் சமூகத் தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றிவருகின்றது. ஸ்ரீ குருஞான சம்பந்தரது பரம்பரையில் தற்பொழுது 26 - ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்கள் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள்.** அவர்களால் தமது ஆதி பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் திருப்பெயரில் நிறுவப்பெற்ற " ஞானசம்பந்தம் பதிப்பக " அறக்கட்டளை வெளியீடாக இந்நூல் வெளியிடப் பெற்றது.



தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

T.N.Ghaganathan..

உ
சிவமயம்

திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார்

அருளிச்செய்த

திருக்களிற்றுப்படியார்

உரைநடையுடன்

அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்—அம்மையப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பார் அவர்.

சத்தி, சிவம் என இருதன்மையுடைய ஒருவரே உலகுக்குத் தாயும் தந்தையும் ஆவர். அவர் தமது அருட்சக்தியுடன் தோன்றிப் பக்குவப்பட்ட உயிர்கட்கு அருள்புரிவர். எல்லா உலகங்களுக்கும் அப்பாற்பட்டவராதலின் உயிர்களெல்லாம் தமது முயற்சியாலே அறியக்கூடாதவர். அப்பாற்பட்டாலும் உலகங்களிற் கலந்து அவற்றில் துடக்குறாது நிற்பர். (1)

தம்மில் தலைப்பட்டார் யாலே தலைப்பட்டுத்
தம்மில் தலைப்படுதல் தாமுணரின் — தம்மில்
நிலைப்படுவர் ஒரிருவர் நீக்கிநிலை யாக்கித்
தலைப்படுவர் தாம்அத் தலை.

தம்மை உய்விப்பான் எழுந்தருளிய அறிவாசான் சொல்வழி நின்று, தம்மறிவிலே சிவம் விளங்குவதை உணர்ந்தவர் தலைவனையும் தம்மையுமுணர்வர். அவர் தம்மை மறந்து தலைவனோடு பொருந்திநிற்பின், தலைவன் தன்மையை அடைவர். (2)

என்னறிவு சென்றளவில் யானின்று அறிந்தபடி
என்னறிவி லாரறிக என்றொருவன் — சொன்னபடி
சொல்லக்கேள் என்றொருவன் சொன்னான் எனக்கதனைச்
சொல்லக்கேள் யானுனக்(கு)அச் சொல்.

ஒரு பேராசிரியர் தன்பால் ஞான நூல் கேட்கவந்த மாணவர்களை நோக்கி, 'எனது பசுபோதங்கெட்டுச் சிவானுபூதி நிலையில் நான் தெரிந்தபடி செருக்கற்ற நீங்கள் கேட்பீர்களாக' என்று உபதேசஞ்செய்த நூலினைக் கேட்ட எனது ஆசிரியர் எனக்குச் சொன்னபடியே நான் உனக்குச் சொல்லுகிறேன்; நீ அதனைக் கேட்பாயாக. (திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் பால் உபதேசம் பெற்ற ஆளுடைய தேவ நாயனார் தமக்கு உபதேசித்ததை இந்நூலாசிரியர் தமது மாணவருக்கு அறிவுறுத்துவதாகக் குறிப்பிக்கின்றார்.) (3)

அகளமய மாய்நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போல்உலகில் தங்கி — நிகளமாம்
ஆணவ மூல மலம்அகல ஆண்டனன்காண்
மாணவக என்னுடனாய் வந்து.

பரஞானமாகிய அருள்வெளியிலே நின்று பக்குவம் அடைந்த உயிர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் கூத்தப்பிரான், என்னைப் பந்தப்படுத்தும் ஆணவமாகிய மூலமலம் என்னை விட்டொழியும்படி, அநாதியே உயிர்க்குயிராய் நின்று உண்மை அறிவித்தருளி, பக்குவ காலத்திலே ஆசிரியனாய்த் திருவுருக்கொண்டெழுந்தருளிவந்து ஆட்கொண்டனன். மாணவனே, நீ இதை அறிவாயாக. (4)

ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே — பாகத்(து)
அருள்வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

அருள் வடிவுடைய மாதொருபாகன் அன்பர்க்குத் தோன்றி மெய்யினை அறிவுறுத்தாவிடின், சிறந்த சமய நூல்கள் எவ்வாறு உளவாகும்? ஆறுவகைப்பட்ட சமய ஒழுக்கங்கள் எவ்வாறு தோன்றும்? அவற்றின் பயனுன யோக முயற்சியும் ஞானமும் எங்ஙனம் விளையும்? இறைவன் இங்ஙனம் வந்து உணர்த்தாத விடத்து அவன் பேரியல்பை யார் தானுக அறியமுடியும்? (5)

சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்குநலம் வந்துறுமோ — ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய்இதனைச் செப்பு.

மெய்ந்நூல் கற்றூர்க்கு ஆசிரியன் அறிவுரை மாத்திரத்திலே உளதாகும் பெரும்பயன் விளையுமோ? கடல்நீர் குடித்தவர்க்கு விடாய் தணியாது. முகில் நீரைமொண்டு மழையாக நன்னீர் பொழிந்தால், அஃதே பயன்படும். அது போல அனுபவப் பயனை அறிவாசான் விளக்கினலொழிய அறியமுடியாது. (6)

இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்
நின்ற மலமனைத்தும் நீக்குவதிங்(கு) — என்ருல்
உருவுடையான் அன்றே உருவழியப் பாயும்
உருவருள வல்லான் உரை.

மலமெல்லாம் நாற்றமுடையன ஆயினும் புனிதமமைந்த பசுவின் மலமாகிய சாணம் பிற மலங்களனைத்தையும் நீக்கும். அதுபோல ஆசிரியனும் மக்களுள் ஒருவன் எனினும், சிவன் அவனை நிலைக்களமாகக் கொள்ளுதலினுல், அவன் பிறவியை ஒழிக்க வல்லவன் ஆவன் என்றறிக. (7)

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவரே
அண்டத்தின் அப்புறத்த தென்னுதே — அண்டத்தின்
அப்புறமும் இப்புறமும் ஆரறிவுஞ் சென்றறியும்
எப்புறமும் கண்டவர்கள் இன்று.

ஆசிரியனுய் வந்த கடவுள் நல்கிய ஞானத்தைக்கொண்டு நிட்டை நிலை கைகூடப்பெற்றவர், இறைவனை உலகிற்கு அப்பாற்பட்டவன் என்று கூருமல் உலகெங்கணும் உயிர்கள் யாவற்றினும் அவன் கலந்துநிற்கும் நிலையை அனுபவத்தாற் கண்டவர்ாவர்.

மெய்யுணர்வுடையோர் இறைவனை அகண்டமாகக் கண்டு வழிபடுவார் என்பது கருத்து. (8)

அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடனுகிச்
சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றதிலை — இன்றிதனை
இவ்வா றிருந்ததென் றெவ்வணஞ் சொல்லுகேன்
அவ்வா றிருந்த தது.

அயன் அரி முதலிய தலைவர்களுக்கும் இறைவன் தன்மை தெரிந்ததில்லை. அவனை அனுபவத்தாலுணர்ந்தவர்க்கும் தமது அனுபவம் எவ்வாறெனத் திட்பமாகக் கூறமுடியாது. வினவுவார்க்கு அது அநுபவித்தவாறு இருந்ததுஎன்பதே அவர்களால் கூறமுடியும். (9)

ஒன்றுங் குறியே குறியாத லால்அதனுக்(கு)
ஒன்றுங் குறியொன் றிலாமையினுல் — ஒன்ருே(டு)
உவமிக்க லாவதுவுந் தானில்லை ஒவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று.

சார்ந்த பொருளில் அதுவதுவாய் நிற்குந்தன்மை உயிர்க்குளது. அத்தகைய உயிர் முடிபாகச் சாரும் தன்மையின் வைத்து இறைவன்தன்மை துணியப்படுவதன்றி உலகிலுள்ள பிற எப்பொருளில் வைத்தும் அவனைஅறியமுடியாது. ஏனெனில் எப்பொருளும் இறைவனுக்கு உவமை ஆவதில்லை. முடிபாகச் சாருந்தன்மை தவமிக்கோர்பால் காணப்படும். (10)

ஆற்ருல் அலேகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை
மாற்றி அவ் வாற்ருன் மறித்தாற்போல் — தோற்றிப்
புலன்களெனப் போதம் புறம்பொழியும் நந்தம்
மலங்களற மாற்றுவிக்கும் வந்து.

ஆற்றுநீர் கடல்நீரோடு கலந்தபின், மீண்டும் ஆற்றிலே எதிர்த்துவரின் அது கடல்நீரின் தன்மை உடையதாம். அது போலச் சிவானுபூதிமான்கள் உடலிலே தங்கினும், புலன்வசப் படார்; சிவன் வயப்பட்டு இருப்பர். அன்ஞேர் வாயிலாக இறைவன் நமது மலங்களைக் களைந்தொழிப்பன். (11)

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனைஅன் றேவிக் கராங்கொண்ட — பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்.

சிவஞானிகளுக்குக் கரணங்களெல்லாம் சிவகரணமாய்த் திரிபுற்றமை, பாலைநிலம் நெய்தலாகும்படி திருஞானசம்பந்தப் பெருமான் பாடியதும், அப்பர்பிரான் பாம்புவிடம் நீங்கும்படி பாடியதும், முதலைவாய்ப் பாலனைச் சுந்தரமூர்த்தி நாயஞர் அழைத்ததும்பற்றி உணர்ந்துகொள்க. (12)

தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்
தாங்களே சட்ட உறங்குவர்கள் — ஆங்கதுபோல்
ஐயன் அருட்கடைக்கண் ஆண்டதற்பின் அப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார்.

இறைவன் குருவாகி யெழுந்தருளி ஆட்கொள்ளுமுன்ன மேயே அருள் வீழ்ச்சியினுல் பக்குவமிக்க உயிர்கள், இறைவன் திருவருட் கடைக்கண் பாலித்து ஆண்ட பின்னர், சிவமாந்தன் மையைத் தாமே மெல்ல மெல்ல எய்திவிடுவர். அது தூக்க மிக்காரைப் படுக்கையில் விட்டபின், உறக்கத்தை மற்றவர்கள் அவர்களுக்குக் கொடுப்பதில்லாமல் அவர்களே நன்ருகத் தூங்கிவிடுவதைப்போலும். (13)

உள்ள முதலனைத்தும் ஒன்ற ஒருவவரின்
உள்ளம் உருகவந் துன்னுடனும் — தெள்ளி
உணருமவர் தாங்கள் உளராக என்றும்
புணருமவ னில்லாப் பொருள்.

தன்னுணர்ச்சியோடு ஆராய்ந்து தெளிய முயன்ருல், இறைவன் முன்னிற்கமாட்டான். உள்ள மலங்களெல்லா ஓடுங்கி அழியும்படி தம்மை மறந்து அன்புசெயின் உள்ளம் உருகும்படியாக இறைவன் உடன் கலப்பன். (14)

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழியும் — வல்லதனுல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு அரன்.

பயன் கருதாது கைக்கொள்ளும் சிவனறமாகிய சரியை கிரியைகளில் நின்ருதல், நல்ல சிவயோகத்திஞலாதல், நல்ல சிவஞானத்திஞலாதல் யானென்னும் தன்னுணர்ச்சி கெடும்படியாக யாராவது அன்புசெயின் யாருங்காணமுடியாத பெருமான் வெளிப்பட்டுத் தோன்றுவன். (15)

மெல்வினையே யென்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே யென்ன வருமிரண்டும் — சொல்லிற்
சிவதன்மம் ஆமவற்றிற் சென்றதிலே செல்வாய்
பவகன்மம் நீங்கும் படி.

சிவனறமென்பது, மெல்வினையும் நிலவுலகத்தார் ஆற்றுதற்கரிய வல்வினையும் என இருவகைப்படும். பிறவிக்கு ஏதுவாய வினை நீங்கும்படி, அவ்விரண்டனுள் உனக்குப் பொருந்திய தொன்றை நீ கடைப்பிடிக்க. (16)

ஆதியை அர்ச்சித்தற் கங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவும் செய்வனவும் — வேதியனே
நல்வினையாம் என்றே நமக்கும்எளி தானவற்றை
மெல்வினையே என்றதுநாம் வேறு.

முதல்வனை வழிபடற்குத் துணையாவன இயற்றுவதும், பல்வகையாக அவனை வழிபடுவதும் எளிதாகச் செய்யக்கூடியவை என்னும் காரணத்தால், அவற்றை மெல்வினையென யாம் செப்பிய தென்றறிக. (17)

வரங்கள்தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்றுகறி யாக்க — இரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே என்றதுநாம் மற்று.

வரங்களைத்தரும் வயிரவவேடங்கொண்டு வந்த பெருமானுக்குச் சிறுத்தொண்டர் தமது கரங்களினாலே கறியாக்கும் பொருட்டுச் செய்த கொடுவினையாய பிள்ளைக்கொலை முதலியவற்றையே வல்வினை யென்றேம். (18)

பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும் — சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தஞ்செயலால் தான்.

பாவமென்றும் பழியென்றும் பாராதே, அந்தணனாகிய தந்தையின் தாளினைச் சண்டேசுரர் சேதித்தபோது இறைவன் தானாகின்ற தன்மையை அவர்க்களித்தான். (19)

செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை
ஐய இதுஅமுது செய்கென்று — பையவிருந்(து)
ஊட்டி அறுத்தவர்க்கே ஊட்டி அறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்னோ நாம்.

வயலிலே கமரில் சிந்திப்போன கட்டளைப்பொருளாகிய செந்நெலரிசி, செங்கீரை, மாவடு என்பனவற்றைச் சிந்திய விடத்திலேயே இறைவன் அமுதுகொண்டருளும்பொருட்டுத் தனது ஊட்டியையறிந்த அரிவாட்டாயநாயனர், பெருமானுக்கு அமுதும் ஊட்டித் தமது பிறவியையும் அறுத்தனர். அவரை வல்வினைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவதொழிய வேறு எவ்வாறு அவர் பெருமையை எடுத்துப்பேசுவது? (20)

செய்யும் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டார் — ஐயா
உழவும் தரிசும் ஒருமுகமே யானல்
இழவுண்டோ சொல்லாய் இது.

தாம் அளவற்ற பேரன்பினலே செய்யும் செய்கையைச் சிவன்பொருட்டுச் செய்யுமுகத்தானே தம்மையும் அவனுக்கே மெள்ளக்கொடுத்துத் தற்போதமிழந்தவர்களே வல்வினையாளர். தன்னுணர்ச்சியற்றுத் தன்செயலைச் சிவன்செயலாக்கிவிடவே கொடுவினையாகத் தோன்றுஞ் செயல் பெரும் புண்ணியம் ஆயிற்று. கடன் கொடுத்தவர்க்கே கடனளி தன் வேலையை உரியதாக்கிவிட்டால், கடனும் தீர்ந்து தன் நிலத்தையும் பெற்றவனுதல் போலத் தன்செயலை இறைவனுக்கு உரியதாக்கி விட்டால், கொடுவினையாகிய பாவமும் நீங்கிப் புண்ணியமும் உள்ளதாகும். (21)

ஆதார யோகம் நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே — ஆதாரத்(து)
ஆக்கும் பொருளாலே ஆக்கும் பொருளாமொன்(று)
ஆக்காப் பொருளேயொன் றும்.

ஆதார யோகமென்றும், நிராதார யோகமென்றும் யோகம் இருவகைப்படும். அவை இரண்டும் மேலான நிலையாகிய திருவடியின்கண் சேர்ப்பிக்கும். ஆதாரயோகம் திருவுருவ வழிபாடாகும். அதாவது உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களிலே

பெருமானின் பல்வகைத் திருமேனிகளை நினைந்து பேரன்பால் வழிபட்டு ஒற்றுமையுறுதல். நிராதார யோகம் அகண்டமான பெருமானை அருள்வெளியிலே நினைந்து அவனோடு ஒன்றுதலாகும். (22)

ஆக்கி ஒருபொருளை ஆதாரத் தப்பொருளை
நோக்கி அணுவில் அணுநெகிழப் — பார்க்கில்
இவனாகை தானெழிந்திட் டேகமாம் ஏகத்(து)
அவனாகை ஆதார மாம்.

உடம்பினுள் ஆறு ஆதாரத்தில் ஒன்றில் இறைவனது திருமேனியை ஆசிரியன் காட்டிய முறையிற் கற்பித்து அதனை எண்ண எண்ணத் தன்னுணர்ச்சியானது கற்பித்த நுண்ணிய வடிவத்தில் மறைந்தொழிய, அவ்வடிவொன்றுமே தோன்றும். பின் அவ்வடிவு தானாகவே தோன்றப்பெறுதலாகிய யோகமே ஆதாரயோகமாம். (23)

கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயின்
கொண்டவனும் அப்பரிசே கூறுபடும் — கொண்ட
இருபொருளும் அன்றியே இன்னதிது என்ற(து)
ஒருபொருளே யாயிருக்கும் உற்று.

நினைப்பிற் கொண்டதொரு இறைவடிவத்தைக் கோடியங்கில் ஒன்றாக நுண்ணியதாக எண்ணி நினைந்தால், நினைக்கின்றவனும் அத்துணை நுண்ணியநிலை அடைவன். பின்னர் நினைப்பான், நினைபொருளென்ற உணர்ச்சியும், செய்வது இன்னது என்ற உணர்ச்சியும் ஒழியவே நினைத்த ஒருபொருளே முழுதுமாயிருக்கும். (24)

அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆறாகப் பெற்றறிந்தே — அஞ்செழுத்தை
ஓதப்புக் குள்ள மதியுங் கெடில்உமைகோன்
கேதமற வந்தளிக்கும் கேள்.

ஓங்காரமாகிய ஐந்தெழுத்தே உமையொருபாகனுகிய பெருமானைக் காட்டவல்லதாகலின், அவ்வைந்தெழுத்து ஆறு ஆதாரங்கட்கு அடிப்படையாய் நிற்கிற முறையை அறிந்து அம்மந்திரத்தின் நுண்பொருளை அறியப் புகுந்து, தன்னுணர்வு கெட்டால் உமை மணவாளன், மலமகல வந்தருளுவன். (25)

ஆக்கப் படாத பொருளாய் அனைத்தினிலும்
தாக்கித்தான் ஒன்ருேடும் தாக்காதே — நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனுய்
நிற்கை நிராதார மாம்.

கற்பனை கடந்த பொருளாய் எல்லாப் பொருளிலும் கலந்துங் கலவாது, உயிரின் உய்திக்குமாறுய பொருளை அகற்றி, தன்னை நீங்காது உடன் நிற்கும் அருட்சக்தியோடு கூடிய பெருமானேடு வேற்றுமையற நிற்றல் நிராதாரயோகமாகும். (26)

காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்ருர் காட்சியறக் கண்ணுதலைக் — காண்கின்ருர்
காண்பானுங் காணப் படும்பொருளும் அன்றியே
காண்கையினுற் கண்டனரே காண்.

ஞானக்கண்கொண்டு இறைவனைக் காண்கின்றயோகிகளே, அவனைச் சுட்டிறந்த நிலையில் காண்கின்ருர்கள். தான் அவனென வேறுபடுத்து அறியாது அவனைக் காண்கின்றவர்களே உள்ளபடி அவனைக் கண்டோராவர். (27)

பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான் — பேசாதே
எண்ணென்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால்
உள்நின்றும் போகான் உளன்.

நிராதாரயோகம் நிலைபெறும்படி பேசாமையாகிய மௌனம் கைக்கொள்ளலாம். மௌனமாயிருக்கின்ற முறையை ஆசிரிய

னிடம் பெற்றறிந்து அம்முறையாலே மனமானது புலன்களிற் செல்லாமையைத் தலைப்பட்டவர்க்கு இறைவன் பிறவியை அறுத்தருள்வன். மௌனமாய், நினைவு இறைவன்பாலொன்று படும் வண்ணம் யோகத்திருப்பவருடைய உள்ளத்தினின்றும் அவன் புறத்தே செல்லானென அறிக. (28)

ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற இடஞ்சிவமாம் — நாட்டற்று
நாடும் பொருளனைத்தும் நானு விதமாகத்
தேடுமிடம் அன்று சிவம்.

ஓடியாடாதே அசைவு இன்றி முதல்வனை அறிகின்ற அறிவினைத் தலைப்பட்டு, அவனைத் தேடுதலில்லாது, நின்ற இடத்தே சிவம் வெளிப்படும். உலகிற் பொருந்தி விரும்பிய பொருள்களையெல்லாம் பல்வகையாகத் தேடுவதுபோலத் தேடுமிடத்தே சிவம் விளங்காது. (29)

உணராதே யாதும் உறங்காதே உன்னிப்
புணராதே நீபொதுவே நிற்கில் — உணர்வரிய
காலங்கள் செல்லாத காலத்துடன் இருத்தி
காலங்கள் மூன்றினையும் கண்டு.

உலகப் பொருள் எதனையும் அறிந்து பற்றாதே. உலகப் பொருள்களின் வேறாக நின்னைக் கண்டபோது எழும் நான் பிரமமென்னும் மயக்கத்திலழுந்தாதே. கடவுளையும் ஆராய்ந்து அறிந்துவிடலாமென்று எண்ணாதே. எவற்றிற்கும் பொதுவாய் நிற்கும் திருவருளோடு ஒன்றிநில். காலங்களைக் கடந்ததாய்க் காலவடிவமான பெருமானோடு காலம் மூன்றினையும் அவனுக்கு வேறென்றறிந்து நிற்க. (30)

பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற — பற்றதனைப்
பற்றுவிடில் அந்நிலையே தானே பரமாகும்
அற்றமிது சொன்னேன் அறி.

பற்றுக்களில் விடுதற்கு அரிய பாசப்பற்றினைத் துடைத்தொழிக்கும் ஒப்பற்ற கருணைப்பரம்பொருளை அறிந்து பற்றி, அதனைப் பிரிந்து தன்னை வேருகப் பார்க்கின்ற பற்றையும் அறவேவைகவிட்டால், அந்நிலையிலேயே சிவம்தானேவிளங்கும். இதனை நன்ருக உணர்வாயாக. (31)

அறிவறிவாய் நிற்கில் அறிவுபல வாமென்(று)
அறிவின் அறிவவிழ்த்துக் கொண்டவ் — வறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தோர்கள் மானுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோல் தான்.

தனது அறிவையே அறிந்து பற்றி நிற்பின், அது அசத்துப் பொருள்களில் பற்றிப் பலவகைப்பட்டு ஒருமையுருமையின், அறிவுக்கறிவாய இறைஞானத்தில் தன்னறிவு அடங்கப்பெற்று அப்பேரறிவின்கண் உளதாம் சிவானந்தத்தை நுகர்ந்து, தொங்குகின்ற மணியின் நாவேபோல், உலகப்பற்று இன்றி வாழ்பவர்களே மனிதருள் துறந்தவராவர். (32)

ஓசையெலாம் அற்ருல் ஒலிக்குந் திருச்சிலம்பின்
ஓசை வழியேசென் றெத்தொடுங்கின் — ஓசையினின்
அந்தத்தான் அத்தான் அரிவையுடன் அம்பலத்தே
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து.

உலகப்பற்றுக்கு ஆதாரமாய சுட்டறிவினை விளக்கும் நால்வகைச் சொற்கள் காரணமாக வரும் ஓசைகளெல்லாம் அற்ருல், நாதகலையாய முதல்வனது திருச்சிலம்பொலி கேட்கும். அதன் தன்மையையுணர்ந்து சென்ருல், அது முடிந்தவிடத்தே சத்தியொடு கூடிய சிவம் விளங்கும். (33)

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் — சார்பு
கெடவொழுகல் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

ஆசிரியர் திருவள்ளுவனார் ' சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் ' என்றருளிச் செய்தமையால், சிவஞானத்தைக்கூடி நிற்றலே சிவநினைவாம். அச்சிவத்தை நினைக்கிறோம் என்ற தன்னுணர்ச்சி கெட்டுவிடின் அதுவே நிட்டைகூடலாம். அந்நிட்டை கைகூடப்பெற்றால் பிறவிக்கு ஏதுவாய வினைப் பற்று ஏற்படாது. (34)

அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்கும் — சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு.

பண்டுதொட்டு உன்னைக் கவர்ந்து மேற்செல்லும் ஐம் புலனைப்பற்றி அவற்றோடு அலமராதே. அவற்றின் வேருக நீ நின்றபடி நின்றால், நீ பற்ற நினைப்பதன்முன், அருட்சத்தி உன்னை விரைந்து பற்றவே, முதல்வனும் தன்னுணர்ச்சி கெடும்படியாகத் தோன்றி முன்நிற்பன். (35)

உண்டென்னில் உண்டாகும் இல்லாமை இல்லையெனில்
உண்டாகும் ஆனமையின் ஓரிரண்டாம் — உண்டில்லை
என்னும் இவைதவிர்ந்த இன்பத்தை எய்தும்வகை
உன்னில்அவன் உன்னுடனே யாம்.

உயிரறிவினால் தேடிப்பெறுதல் கூடுமென்ற கருத்தோடு சென்றால், இறைவன் தோன்றானாதலின், அது கூடாதென்பதே முடியும். அவனை யறிதலே இயலாதென்ற கருத்தினைப் பற்றின் அவனை அருளாலறியும் முயற்சியின்மையின், அது கைகூடா

தென்பதே முடியும். ஆதலின், உண்டு இல்லை என்ற இவ்விருகருத்துமின்றி இறைஞானத்தால் அவனைக்கூட விரும்பியவிடத்தே அவன் உன்னோடு உடனாய்த்தோன்றி ஆட்கொள்ளுவன். (36)

தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல உடம்பாம் முதல்நான்கும் — மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் பரிசறுப்பார் பார்.

உயிர்க்கு ஐந்துடம்பாயமைந்த அசுத்த மாயை முதல் நிலமீறாகவுள்ள முப்பத்தொரு முதலும், அறிவின் மூலமாய நால்வகைச் சொற்கு ஏதுவாய தூய முதல் சுத்த தத்துவம் நான்கும், இவற்றிற்கெல்லாம் அடிப்படையான நாத தத்துவமாகிய சிவமுதலும் ஆகிய முப்பத்தாறும் உயிரின் வேறாய சடமெனவும், இவை தோன்றி யொடுங்கும் முறை ஈதெனவும் உணர்ந்தால், அவ்வுணர்ச்சி உடையோரே பிறவி யறுக்கும் வகை அறிந்தவராவர். (37)

எத்தனையோ தத்துவங்கள் எவ்வெவர்கோட் பாடுடைய
அத்தனையும் சென்றங்(கு) அளவாதே — சித்தமெனும்
தூதுதனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனில்
பாதிதனைக் கும்பிடலாம் பார்.

அளவற்ற சமயக் கோட்பாடுகளையும் அன்னோர் கூறும் உண்மைகளையும் ஆராய்ந்து பார்த்து நேரம் போக்காது, உலகப் பொருள்களிற் செலுத்தும் சித்தமாகிய தூதுவனைத் தொலைத்து ஞானத்தை நாடிச்சென்றால் ஆராய்ச்சியைக்கடந்த அருட்சத்தி கூறனாகிய முதல்வனைக்கண்டு கும்பிடலாம். (38)

சாம்பொழுதில் ஏதும் சலமில்லை செத்தாற்போல்
ஆம்பொழுதி லேஅடைய ஆசையறில் — சோம்பிதற்குச்
சொல்லுந் துணையாகும் சொல்லாத தூய்நெறிக்கட்
செல்லும் துணையாகும் சென்று.

சித்த விகாரக் கலக்கமொழிந்த பெரியார்க்கு உடல் நீங்குங் காலத்தே யாதொரு கலக்கமுமில்லை. உடலோடு உள்ளபோதே பற்று விட்டமையால் செத்தாற்போன்ற நிலையடைதலின், சும்மா இருத்தலாகிய சாதன நெறியும் ஏற்பட்டுச் சொல்லில் அடங்காத ஞானநெறியிற் செல்லுதற்கும் அது துணையாமென அறிக. (39)

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின்அஃ தொன்றுமே வேண்டுவது — வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்.

ஆசிரியர் திருவள்ளுவனர் விரும்புமிடத்துப் பிறவாமையை விரும்புக என்று கட்டளையிட்டமையால், அஃது ஒன்றுமே விரும்பற்பாலது. பிற எவையும் விரும்பத் தக்கன அல்ல. அப்பிறவாமை அவாவின்மையை விரும்பின் தானே வந்து எய்தும் என்றமையால் நாம் வேண்டத்தக்க முதல்வனிடத்தே அவாவறுத்தலை வேண்டுக. (40)

அரண உணர்வுதனில் அவ்வுணர்வை மாற்றில்
கரணமும் காலும்கை கூடும் - புரணமது
கூடாமை யுங்கூடும் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து.

பாதுகாப்பான திருவடி ஞானத்தைப் பெற்ற இடத்தே அதன்கண் நிலைபெற வேண்டும். [சற்று அதனைவிட்டு உலகை நோக்கின், அந்தக்கரணத் தொடர்பும், பிராணவாயுத் தொடர்பும் ஏற்படும். அன்றியும் இறைவனது முழுத் தன்மையை அனுபவியாமையும் ஏற்படும். அதனுல் உடம்பு நீங்காமையும் உண்டாகும். (41)

இன்றிங் கசேதனமாம் இவ்வினைகள் ஓரிரண்டும்
சென்று தொடருமவன் சென்றிடத்தே - என்றுந்தான்
தீதுறுவன் ஆனால் சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லனோ மற்று.

பிறிதோருடம்பு வந்துற்றபோது இருவினைகளும் சென்று பற்றும். அவற்றால் உடம்புபெற்ற ஞானி தீங்கு அடைவனோ என்னில், அருட்சத்தி கூறனாய பெருமான் அவனைக் கைவிட மாட்டான். விட்டகுறையை முடித்து வீடடைவிப்பான். (42)

அனாதி சிவனுடைமை யால்எவையும் ஆங்கே
அனாதி யெனப்பெற்ற அணுவை - அனாதியே
ஆர்த்த துயரகல அம்பிகையோ(டு) எவ்விடத்தும்
காத்தல் அவன்கடனே காண்.

எஞ்ஞான்றும் எல்லாம் சிவனுடைமை ஆதலினால் எஞ் ஞான்றும் இருப்பதாய உயிரைத் தொடக்கமற்ற காலம்வருத்திய துயரத்தை எவ்விடத்திலும் நீக்கிக் காப்பது அருளன்னையுடன் கூடிய அப்பனது கடனாகும். (43)

தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பாம் மஞ்சனநீர் தாமாட்டித் - தம்மையொரு
பூவாக்கிப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே உளன்.

உயிரின்கண்ணே சிவவடிவமாகிய ஞானத்தைக்கண்டு வணங்கிச் சிவபெருமானுக்கு அன்புநீரால் திருமஞ்சனமாட்டித் தன்னை அவனுக்கு வாடாத ஒரு மலராகச் சாத்தி வழிபட்டால் உடல் மீண்டும் எடுத்தலாகிய பிறவியறும். (44)

தன்னைப் பெறுவதன்மேற் பேறில்லைத் தானென்றும்
தன்னைத்தான் பெற்றவன்தான் ஆரென்னில் - தன்னாலே
எல்லாந்தன் னுட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே
எல்லாமாய் நிற்கு மிவன்.

தன்னைப் பெறுவதைப் பார்க்கிலும் சிறந்த பேறு இல்லை என்ப. எப்பொழுதும் தன்னைப் பெற்றவன் யார் என்றால், பாசத்தை அறிந்தது போலச் சிவத்தைத் தன்னறிவின்கண்ணே கண்டு, பற்றிய பாசப்பிணிப்பு அற்று இறைவனோடு கலந்து அகண்டமாய் நிற்கப்பெற்றவனே என உணர்க. (45)

துன்பமாம் எல்லாம் பரவசனாய்த் தான்துவளில்
இன்பமாம் தன்வசனா யேயிருக்கில் - என்பதனால்
நின்வசனா யேயிருக்கில் நின்னுடனும் நேரிழையாள்
தன்வசனா யேயிருப்பன் தான்.

எல்லாப் பொருளையும் பற்றித் தம் வயமிழந்தால் துன்பமாம்; தம்வயமுடைமையால் இன்பமாம் என்ற கருத்தை ஆராய்ந்து நின் வசமாயிருப்பின், திருவருட்சத்தி மயமாய்நிற்கும் பெருமான் உன்னுடனேயிருந்து உனக்கு இன்பம் அளிப்பன். (46)

செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனோ(டு)
ஒத்தாரே யோகபர ரானவர்கள் - எத்தாலும்
ஆராத அக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
பேராமற் செல்வர்அதன் பின்.

அந்தக்கரணத்தொடர்பு அற்றவரே பிறவியற்று முடிவாகிய இறப்பு எய்தினவர்கள். தன்னைச்சேர்ந்த திருவருட்சத்திவழி நிற்பவரே யோகத்தில் துறைபோகிய மேலோர். எல்லாவகை யாலும் நிரம்பாத் தன்மையுடைய கரணங்களில் கட்டுண்டு திருவருள்வயம் நில்லாதவர் அக்கரணங்கள் செல்லும் வழி யெல்லாம் செல்வர். (47)

கண்ணுங் கருத்துங் கடந்ததொரு பேறேயும்
கண்ணுங் கருத்தும் களிகூர - நண்ணி
வடம்அடக்கி நிற்கும் வடவித்தே போல
உடனடக்கி நிற்பர்காண் உற்று.

கண் போன்ற புறக்கருவிகளாலும், மனம் போன்ற அகக் கருவிகளாலும் அறிதற்கரிய கடவுளை மனமும் கண்ணும் களி

கூடும்படிக் காணப்பெற்று, பெரிய ஆலமரத்தைத் தன்னகத்து அடக்கிநிற்கும் வித்தேபோல அவரைப் பேரறிஞராய சிவ னடியார்கள் தங்கள் அறிவகத்து அடக்கிநிற்கும் தன்மையர் என அறிக. (48)

வானகமும் மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
ஊனகத்தே உன்னுமதென் என்றனையேல் - யானகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலாம்
ஆதனமே அன்றோ அதற்கு.

வானகமும்மண்ணகமுமாய எல்லா இடமும் நிறைந்தபெரும் பொருளாகிய கடவுளுக்கு அவையெல்லாம் இருக்கையாம். அது போல அடியார் நெஞ்சகமும் அவருக்கு இடமாம். ஆயினும் பிறவிடங்களில் அப்பொருள் நன்கு விளங்காது அடியா ருள்ளத்தே விளங்குதலின், அவர்கள் கூட்டுறவே பண்டை மல வாசனையை நீக்குதற்குத் தக்க வழியாகும். (49)

கல்லில் கமரில் கதிர்வாளில் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச் - சொல்லும்
அகமார்க்கத் தாலவர்கள் மாற்றினர்காண் ஐயா
சகமார்க்கத் தாலன்றே தான்.

கல்லிலே முட்டப்புகுந்த திருக்குறிப்புத் தொண்டரும், கமரில் இறை நிவேதனப்பொருள் நழுவினமைக்காகத் தமது ஊட்டியை அறுப்பான் புக்க அரிவாட்டாய நாயனாரும், வாளினால் வயிற்றைப் பிளந்திறந்த ஏயர்கோன் கலிக்காமரும், சந்தனச்சாணையினில் முழங்கையைத் தேய்த்த மூர்த்தி நாயனாரும், சூதாடுவதால் இறைபணிக்குப் பொருள்தேடிய மூர்க்க நாயனாரும் சிவனடிக்கீழ் ஒருமைப்பட்ட கருத்தினா லன்றே உலகவாதனையை ஒழித்தார்கள்; உலக நெறியிலே சென்றல்லவே. (50)

உள்ளும் புறம்பும் நினைப்பொழியில் உன்னிடையே
வள்ளல் எழுந்தருளும் மாதினொடும் - தெள்ளி
அறிந்தொழிவா யன்றியே அன்புடையை யாகிச்
செறிந்தொழிவாய் ஏதேனுஞ் செய்.

அகம் புறம் என்ற நினைப்பு ஒழிய, எங்கும் அகண்டமாய் நிற்கும் பெருமானை வழிபடப் பழகியவிடத்தே அவர் தமது அருட்சத்தியோடு உன்மாட்டுத் தோன்றி அருள்புரிவர். ஆதலால் அறிவுநெறி அல்லது அன்புநெறி என்ற இவ்விரண்டில் ஒன்றைக் கடைப்பிடிக்கவேண்டும். (51)

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையால்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக் - கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லதுமற்(று)
யாமறியும் அன்பன் றது.

கண்ணப்பர் அன்பைப் போன்றதொரு அன்பில்லையென்று மணிவாசகனார் அருளியபடியால், கண்ணப்பர்க்கு ஈடாகவே சொல்லத் தகும் அவரன்பினைக் கண்ணப்பரும் காளத்தியப்பருமே அறிவாரன்றி அது பிறரறியுந்தரத்ததன்று. (52)

அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க - அவிழ்ந்தசடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்.

துணியில் முடிந்த நிவேதனத்தை அவிழ்த்து, அதிலிருந்த மலர்ந்த களியைத் தாழ்மை மிக்க மெய்யன்புடன் சேந்தனார் விரிசடை வேந்தனார்க்குப் படைக்க, அது அப்பெருமானார்க்கு இன்னமுதமாயினது காண்க. (53)

சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு.

திருஞானசம்பந்தப் பெருமான், உமையம்மையார் சிவ ஞானத்தைத் தனது நகிலிற் சுரந்த பாலொடுகலந்துகொடுத்திட அதனைப் பருகினாரென்று கேட்ட அளவிலேயே மங்கையர்க்கரசியாராகிய பாண்டிமாதேவியார் திருநகில் சுரந்தனர். அவரது தாழ்ந்த மனநிலையும் மெய்யன்பின் மிகுதியும் இருந்தவாறு காண்க. (54)

அன்பேயென் அன்பேயென் றன்பால் அழுதரற்றி
அன்பேஅன் பாக அறிவழியும் - அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்வதெலாம்
சாற்றும் பழமன்றே தான்.

இறைவனை உள்ளன்போடு அன்பே அன்பே என அழைத்துருகித் தன்னுணர்ச்சி இழக்கும் பேரன்பே பெரும் பயன். பிற புனிதநீர் முழுக்கு, கடவுள் நினைவு, மலர்தூவிப் போற்றல் எல்லாம் நேரே வீட்டிற்கு வாயிலாகா. (55)

எல்லார் அறிவுகளின் தாற்பரியம் என்னறிவு
செல்லு மிடத்தளவும் சென்றறிந்தேன் - வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்றுள்
ஏதமறக் கண்ட திது.

எல்லா அறிவு நூல்களின் கருத்தையும் யானறிந்த அளவு பார்க்குமிடத்து மலவாசனையை ஒழிப்பதற்கு அன்புசெய்தலே தக்க உபாயமாகும். குற்றமற்றதாக அவற்றுள் கண்ட நெறி இஃதே. (56)

வித்தும்அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்
வித்தும்அதன் அங்குரமும் மெய்யுணரில் - வித்ததனிற்
காணாமை யால்அதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணாமை யால்அற்றார் பேறு.

வித்தும் முளையும் போலச் சிவஞானமும் அதன் பயனும் சிவபோகமுமாம். வித்திடத்து முளையைக் காணாமையால் வித்தைக் கைவிடுவார்போல ஞானத்தின் பயன் உணராதவர் ஞானத்தைப் பெறமுயலார். ஞானத்தைப் பெற்றவர்கள் அந் நெறியில் பயின்றொழுகாமையால் சிவபோகத்தை இழத்தல் கூடும். (57)

ஒன்றன்(று) இரண்டன்(று) உளதன்(று) இலதன்று
நன்றன்று தீதன்று நானன்று - நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன்(று) அடியன்று தான்.

சிவம் என்பது அத்துவிதமாய் உயிரறிவில் கலந்து நிற்றலால் அந்நிலை ஒன்று என்று சொல்லக்கூடாதது; இரண்டென்றும் சொல்லக்கூடாதது. தோன்றாமையால்உளதென்று சொல்ல ஒண்ணாதது. ஞானிகளுக்கு அநுபவப் பொருள் ஆதலின் இல்லாததன்று. நன்மை தீமை முதலியன நிகழ்தல் அவன் கட்டளையாதலால், அவன்செயலை நல்லதெனவும் தீயதெனவும் கூற உயிர்களுக்கு இயலாததாகும். அது பாசத்தோடு நின்ற நிலை அன்று. பசுவுமன்று. பசுபோதமுமன்று. ஆதியுமன்று. அந்தமுமன்று. (58)

செய்யாச் செயலைஅவன் செய்யாமற் செய்ததனைச்
செய்யாச் செயலிற் செலுத்தினால் - எய்யாதே
மாணவக அப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கும்
ஆணவமும் அற்ற தறி.

பொறியடக்கத்தோடு இறைவன் திருவருளை எதிர்பார்த்திருக்கும் அமையம் பார்த்து, இறைவன் உயிரைச் சும்மா

இருக்கும் நிலையில் செலுத்துவன். ஆங்குப் பெறும் சிவஞானத்தின்முன் அவாவினை வளர்க்கும் ஆணவமலம் நிலைபெருது ஒழியும். (59)

ஏதேனும் காலமுமாம் ஏதேனும் தேசமுமாம்
ஏதேனும் திக்கா சனமுமாம் - ஏதேனும்
செய்த லொருவலுமாம் செய்யாச் செயலதனைச்
செய்யாமற் செய்யும் பொழுது.

காலம், இடம், திசை, இருக்கை என்பனவற்றைப் பற்றிய நியமங்கள் ஞானநெறி நின்று இறைவனது கலப்பை உடைய உயிர்க்கு இல்லையாம். (60)

செய்தற் கரிய செயல்பலவும் செய்துபலர்
எய்தற் கரியதனை எய்தினர்கள் - ஐயோநாம்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

செயற்கு அரியவற்றைச் செய்து பெறுதற்கரிய பேருகிய வீட்டினைச் சிலர் தலைப்பட்டார். நாம் ஒன்றும் செய்யாதிருத்தலாகிய ஒன்றைச் செய்து அதனைப் பெறக்கூடுமாயினும், அச் செய்யாமையைத்தானும் யாம் கடைப்பிடியாதிருத்தல் எத்துணைத்தவறு? (61)

இப்பொருள்கள் யாதேனும் ஏதெனினும் ஒன்றுசெய்தல்
எப்பொருளும் செய்யா தொழிந்திருத்தல் - மெய்ப்பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலாம்
உண்டிருப்ப தென்னே உரை.

சிவதன்மம் முதலிய நெறிகளில் ஏதாவது ஒரு நெறியில் நிற்றல், அல்லது சும்மாஇருந்து இறையருள் நோக்குதல்,

அல்லது உயர் ஞான ஒழுக்கமாகிய பரம்பொருளையே பார்த்திருத்தல் ஆகிய இவற்றுள் ஒன்றும் செய்யாது மக்கள் உண்டு உடலை மட்டும் ஓம்பியிருப்பதால் பயனென்? (62)

வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடிலென்
நாட்டிலே நல்வினைகள் செய்திடிலென் - கூட்டில்வாள்
சாத்தியே நின்றிலையேல் தக்கனூர் வேள்விசெய்த
மாத்திரமே யாங்கண்டாய் வந்து.

வீட்டு நெறியில் நின்று செயலற்றிருந்தாலென்? உலக வழியிலே நின்று புண்ணிய பாவங்களைச் செய்தாலென்? ஞானமாகிய வாளினை உள்ளத்தே துணையாகக்கொண்டு நில்லாவிடின் தக்கன் செய்த பெருவேள்வியே போல நின்செயல் தீய பயன் விளைத்தல் கூடும். (63)

சிவன்முதலே அன்றி முதலில்லை என்றும்
சிவனுடைய தென்னறிவ தென்றும் - சிவனவன(து)
என்செயல தாகின்ற தென்றும் இவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான்.

சிவன் இறைமையன்றி வேறு இறைமைப் பொருள் இல்லை என்றும், எனதறிவுஞ் சிவனுடைமையே என்றும், என் செயலும் அவனது செயலாகின்றது என்றும் கொண்டு தன்செயலற்றிடின் சிவமாதல் கூடும். (64)

இன்(று) இச் சமயத்தின் அல்லதுமற் றேழையுடன்
ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார் - இன்றிங்கே
அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவரார்
எங்குமிலை கண்டாய் இது.

இற்றைய ஞான்று இச்சிவமுதல்நெறியிலன்றி, ஒப்பற்ற ஞானத்தை மொழிந்து அருட்சக்தியுடன் இறைவன் திருநடம் புரிந்தது பிற எச்சமயத்திலும் இல்லை. இச்சமயத்திற் போல

எலும்பு உயிராகும்படி அடியார் பாடியதும் பிற எச்சமயத்திலுங் கேட்டதில்லை. (65)

விரிந்தும் குவிந்தும் விழுங்குவர்கள் மீண்டும்
தெரிந்தும் தெரியாதே நிற்பர் - தெரிந்தும்
தெரியாது நிற்கின்ற சேயிழைபால் என்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று.

உலகெலாம் அறிந்தும் அறிவித்தும் அதன்கண் துடக்குறாது நிற்கும் அருட்சத்தியோடு கூடிய பெருமானைத் தமது அறிவிற்பெற்றபெரியோர்கள்சுட்டற்றவிரிந்த அறிவுடையராய்ச் சிவபோகத்தில் அழுந்தி. அதனாலுண்டாம் பேரானந்தத்தை விழுங்கி, ஊழினால் உலகம் தோன்றினும் அதனை அழுந்தி அறியாது நிற்பர். (66)

ஆதனமும் ஆதனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச் - சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராய்இருப்பர்
ஏதமறக் கண்டவர்கள் இன்று.

தத்துவங்களாகிய இருக்கையும், உயிராகிய இருப்போனும் ஆகிய இருவகையிலும் கலந்து நிறைந்துநின்ற பெருமானை அறிவாசான் நல்கிய திருஞானத்தாலறிந்து, உயிராகிய அறிவுடைப் பொருளை முதல்வனாகிய பேரறிவனிடத்தே செலுத்தி உயர்ஞானச் செல்வராய்த் திகழ்வர் மலம் நீங்கிய பெரியோரென உணர்க. (67)

தாமடங்க இந்தத் தலமடங்கும் தாபதர்கள்
தாமுணரில் இந்தத் தலமுணரும் - தாமுனியில்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து.

ஞானிகள் ஒடுங்க உலகம் ஒடுங்கும்; அவர்கள் உலகை நோக்கின் உலகம் உணர்ச்சியுடையதாகும். அவர்கள் சினந்தால் செல்வமும், புகழும், கல்வியும் தங்கா. (68)

துரியம் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன் மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன்.

உயிரறிவால் அறியப்படாத மேலான அருட்சக்தியுடன் கூடிய பெருமான் ஞானிகட்கு நனவிலே புலனும் வண்ணம் கலந்து தோன்றி, தனது செயல்களை அவர்கள் வாயிலாகச் செய் வித்து, அவர்களுடையனவாகத் தோற்றுவிப்பன். (69)

ஓடம் சிவிகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனை தாளம் பாலைநெய்தல் - ஏடெதிர்வெப்(பு)
என்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

புகலிவேந்தர்பொருட்டுத் திருக்கொள்ளம்பூதூரிலே ஓடத் தைச் செல்வித்தும், சிவிகை, குறையாத பொன்முடிச்சு, பொற்றாளம் முதலியன நல்கியும், ஆண்பனையைப் பெண்பனை யாக்கியும், திருப்பாடலால் மறைக்காட்டில் கதவமடைப்பித்தும், பாலையை நெய்தலாக்கியும், ஏட்டினை ஆற்றினெதிரே செல் வித்தும், தீயில் ஏட்டினைக் காத்தும், பாண்டியனுக்கு வெப்பு நோய் தீர்த்தும், எலும்புக்கு உயிர்கொடுத்தும் இறைவன் தன்செயல்களை அவர்செயல் ஆக்கினன். (70)

கொல்கரியின் நீற்றறையின் நஞ்சிற் கொலைதவிர்தல்
கல்லே மிதப்பாய்க் கடல்நீந்தல் - நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசல்திறப் பித்தல்
திருவாமூ ராளி செயல்.

கொல்லவந்த யானையாலும், நீற்றறையிலும், நஞ்சாலும் நேரக்கூடிய கொலையைத் தவிர்த்தும், கல்லே தெப்பமாகக் கடல் நீந்திக் கரையேறியும், திருமறைக்காட்டில் திருக்கதவு

திறப்பித்தும் திருவாரூர் அடிகள் அருட்செயல் செய்தமை காண்க. (71)

மோகம் அறுத்திடின்நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுகளை
ஏதாகச் சொல்வேன் யான்.

பெண்டிர்வேட்கை விட்டவர்க்கே வீடு நல்குவதாக அருள் நூலுள் மொழிந்த பெருமானைத் தான் விரும்பிய மாதின்பால் தூதுவிடுக்கும் வன்தொண்டரின் செயலை என்னென்று சொல்வது ? (72)

பாய்பரியே றந்தப் பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

திருவாதவூரடிகளாகிய தேன்போன்ற இனிய தன்மையார், பரிமேல் வந்த பரமானந்தக் கடவுள்மீது திருவாசகம் திருவாய் மலர்ந்து, மயக்கந்தரும் பிறவி வாசனையை எமக்குத் தொலைத் தருளினர். (73)

அம்மையிலும் இம்மையிலும் அச்சந் தவிர்த்தடியார்
எம்மையுமாய் எங்கும் இயங்குதலான் - மெய்ம்மைச்
சிவயோக மேயோகம் அல்லாத யோகம்
அவயோகம் என்றே அறி.

சிவனையறிந்து கூடிய யோகத்தால் இம்மை மறுமை அச்சங்கள் தீர்ந்த அடியார் எக்காலத்திலும் எவ்விடத்திலும் செல்லும் பேராற்றல் பெற்றும் இயங்குதலால், சிவயோகமே யோகங்கள் பலவற்றினும் சிறந்தது. பிறவகை யோகங்கள் பிறவியைத் தொலைக்கப் பயன்படா. (74)

மன்னன்அருள் எவ்வண்ணம் மானுடர்பால் மாணவக
அன்ன வகையே அரனருளும் - என்னில்
அடியவரே எல்லாரும் ஆங்கவர்தாம் ஒப்பில்
அடியவரே எல்லாம் அறி.

மனிதர்பால் மன்னன் அருள்செய்தல் எவ்வாறோ, அவ்வாறே உயிர்களிடத்து ஈசனருளுமாம். அதாவது தகுதி யறிந்து பயனளித்தல். எல்லாவுயிரும் ஈசனுடைய அடிமைகளே யாயினும் யோகிகளும் ஞானிகளுமே சிறந்த ஒப்பற்ற அடிய ராவார். (75)

உடம்புடைய யோகிகள்தாம் உற்றசிற் றின்பம்
அடங்கத்தம் பேரின்பத் தாக்கத் - தொடங்கி
மூளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
இளைப்பதுமொன் றில்லை இவர்.

சிவஞானம் பெற்ற யோகிகள் உடம்போடு இருக்குங்காலை, சிற்றின்பத்தை ஊழ்வலியால் நுகரநேர்ந்தாலும் அதனைப் பேரின் பமாகக் கருதுவாராதலின், அதனால் பிறவிக்கு வித்தாய்வரும் வினை யாதுமில்லை. சிற்றின்பத் தொடர்பால் உளவாம் மாய்வும் தேய்வும் இல்லை. (76)

பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத் துள்ளானை உள்ளபடி - பேரின்பம்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த இன்னமுதம்
உண்டவரே உண்டார் சுவை.

திருப்பாற்கடலில் உண்டான அமுதத்தை உண்டவர்களே அதன் சுவையைக்கண்டு சாவு நீங்கினவராவர். அதுபோலப் பேரின்ப வடிவமான பெரிய சத்தியோடு ஒப்பற்ற இன்பமுடை யானைக் கண்டவர்களே பேரின்பம் நுகர்ந்து பிறவி அறுத்தவ ராவர். (77)

நங்கையினுன் நாமனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினுற் செய்தளிக்கும் நாயகனும் - நங்கையினும்
நம்பியாய்த் தான்நடுவே நாட்டப் பெறுமிதுகாண்
எம்பெருமா ளுர்தம் இயல்பு.

நமது கையினுல் நாம்செய்யுங் காரியங்களெல்லாம் செய்தல் போல, உமையம்மையால் உலகமெல்லாம் உண்டாக்கிக் காப்பவன் முதல்வன். அவ்வருட்சத்தி நடுவே சிவம் நிற்றலின், அருட்சத்தியின்செயலெல்லாம் சிவன்செயலாகவேகருதுக. (78)

பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்ருற்போல்
அந்நிறம் அண்ணலும் அம்பிகையும் - செந்நிறத்தள்
எந்நிறத்த ளாயிருப்பள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்த ளுயிருப்பன் ஆங்கு.

பொன்னின் மாற்ருனது பொன்ளுலாய பணியினும் பொற் கட்டியினும் ஒரு தன்மையதாக இருப்பதுபோல, அப்பனும் அம்மையும் ஆம். அம்மை எவ்வடிவமாயிருக்கின்ருளோ, அவ்வாறே இறைவனும் அவளுடன் கலந்திருப்பன். அதாவது ஐந்தொழில் இயற்றுதற்பொருட்டுச் சத்தி வெவ்வேறு வடிவங் கொள்ளினும், சிவபெருமான் ஒரு தன்மையாக அவளுடன் கலந்திருப்பன் என்பதே கருத்து. (79)

தாரத்தோ டொன்ருவர் தாரத்தோர் கூருவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர் - தாரத்தின்
நாதாந்தத் தேயிருப்பர் நாற்ருனத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு.

நுண்ணிய ஐந்தொழிலிலே இறைவர் சத்தியோடு ஒத்து நிற்பர். பருவுடம்பு உளதாகற்பொருட்டுச் சத்திகூறளுகவும் இருப்பர். அதிகாரிகளாய ஐவரை அதிட்டித்து எவ்விடத்தும் அம்மை செயற்குத் தலைமைபூண்டிருப்பர். ஒடுக்கத்திலே நாத தத்துவ முடிவிலேயும் சத்தியோடிருப்பர். நாலாந்தொழிலாகிய

மறைப்பாற்றற்கண்ணும் சத்தியோடு இயைந்துநிற்பர். உலகங் கடந்த அருள்வெளியிலே பராசத்தியோடு இருப்பர். சத்தியை உள்ளடக்கித் தனியேயும் இருப்பர். (80)

ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்கள் ஒன்ருக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால் - இன்றுரைக்க
என்ருல் இயன்றிடுமோ என்போல்வார் ஏதேனும்
சொன்ருல்தான் ஏறுமோ சொல்.

பலவேறுமுரண்பட்டனவாகத்தோன்றும் கொள்கையுடைய நூல்கள் ஒருங்கு ஒத்து ஒன்றைத் துணிந்து இயம்பமாட்டா. அவற்றைப் பின்பற்றி ஒழுகும் மக்களுக்கு, யான் ஏதாவது சொல்லக்கூடுமா? ஏதாவது சொன்ருல். அது அவர்கள் உள்ளத்தில் ஏறுமா? (81)

யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்
மாதேயும் பாகன் இலச்சிஊயே - ஆதலிஞல்
பேதமே செய்வாய் அபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின்.

எக்காரணத்தாலும் எல்லா உலகிலும் உள்ள எல்லாவகைப் பொருள்களும், மாதொருபாகனுரது அடையாளங்களே ஆகும். ஆதல்பற்றி ஒற்றுமைப்படுத்தியும், அவற்றின் வேருதல்பற்றி வேற்றுமைப்படுத்தியும் இருதன்மையும் இருத்தல்பற்றி இடை நிகர்த்தாயும் பேசுக. எவ்வாறு பேசினும் உண்மை நோக்கிப் பொருந்துமாறறிக. (82)

நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா
மன்றினுள் நின் ருடல் மகிழ்ந்தானும் - சென்றுட்னே
எண்ணுறும்ஐம் பூதமுதல் எட்டுருவாய் நின்ருனும்
பெண்ணுறநின் ருடும் பிரான்.

யாவற்றையும் படைப்பான் நிலம், நீர், நெருப்பு, கால், வான், மதி, ஞாயிறு, உயிர் ஆகியவற்றைத் திருமேனியாக்

கொண்டானும், உயிர்களைக்காக்க மன்றினில் நடம்புரிந்தானும், மாதொடுமாத்திரம் கூடி ஒடுங்குங்காலத்து ஆடினும் ஆகிய பெருமானது தன்மையை, அவன்றன்னைத் தோற்றுவியாது உலகம் தோன்ற நின்றதுபோலத் தன்னுணர்ச்சி தோன்றப் பெருது அவனோடு அத்துவிதமாய்நின்ற பெரியோரன்றிப் பிறர் அறியார். (83)

சிவமே சிவமாக யான்நினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச் - சிவமென்(று)
உணர்வாரும் அங்கே உணர்வழியச் சென்று
புணர்வாரும் உண்டோ புவி.

சிவத்தோடு அத்துவிதமாய்ச் சிவநினைவு ஒன்றேயுடையரா யிருப்பதன்றி, இவ்வுலகில் சிவத்தைத் தன்னின் வேறென்று உணர்வாரும் அறிவுகெட்டுச் சிவம் அடையப்பெறுவாரும் வீட்டினராதலுண்டோ ? (84)

அதுஇது என்றும் அவன்நானே என்றும்
அதுநீயே யாகின்ருய் என்றும் - அதுவானேன்
என்றுந் தமையுணர்ந்தார் எல்லாம் இரண்டாக
ஒன்ருகச் சொல்லுவரோ உற்று.

சிவமும் உயிரும் வேறென்றும், உயிரே சிவமன்றிச் சிவமென ஒன்று வேறில்லை என்றும், நான் சிவமேயாய்விட்டேன் என்றும், தம்மை உணர்ந்த அறிவர்கள் வேற்றுமையாகவும் ஒருமையாகவும் பேசுவாரோ? பேசாரென அறிக. (85)

ஈருகி அங்கே முதலொன்ருய் ஈங்கிரண்டாய்
மாருத எண்வகையாய் மற்றிவற்றின் - வேருய்
உடனுய் இருக்கும் உருவுடைமை என்றுங்
கடனு யிருக்கின்ருன் காண்.

எல்லாம் முடிவுற்றகாலத்திலே, ஒரே முதற்பொருளாய்ப் படைப்புக் காப்புக் காலத்திலே சத்தி சிவமென இரண்டாய்

ஒவ்வொரு படைப்புத்தோறும் மாருது தோன்றும் எண்வகை வடிவனுய்த் தன்தன்மையால் வேருய்த் தலைவனுதலின் உடனு யிருத்தலைத் தனது கடனுகக்கொண்டான் கடவுளென்றறிக.(86)

உன்னுதரத் தேகிடந்த கீடம் உறுவதெல்லாம்
உன்னுடைய தென்னுய்நீ உற்றனையோ - மன்னுயிர்கள்
அவ்வகையே காண்இங் கழிவதுவும் ஆவதுவும்
செவ்வகையே நின்றசிவன் பால்.

உன் வயிற்றிலே கிடந்த புழுப்படும் துன்பமெல்லாம் உன்னுடைய துன்பமென்று சொல்லமாட்டாய், நீ அவற்றை நுகராமையால். அவ்வாறே சிவன்பால் நின்ற மன்னுயிர்கள் தோன்றுவதும் அழிவதுமாய செய்கை வகைகளால் அவை துன்புறுமேயன்றி அவன் துன்புருன் என அறிக. (87)

அவனே அவனிமுத லாகிநின் ருனும்
அவனே அறிவாய்நின் ருனும் - அவனேகாண்
ஆணுகிப் பெண்ணுய் அலியாகி நின்ருனும்
காணுமை நின்ருனுங் கண்டு.

நிலம் முதலிய சடவுலகெல்லாம் அவனே அறிவால் நிறைந்துநிற்பவன். அவனே உயிர்களறிவுக்கு அறிவாய் நிற்பவன். அவனே ஆண், பெண், அலியென்ற முத்திறப் படைப்பிற்கும் ஆதியாய் நிற்பவன். இத்தனைவகையாகநின்றும் உயிர்களால் காணப்படாமல் நிற்பவனும் அவனே. (88)

இன்றுதான் நீயென்னைக் கண்டிருந்துங் கண்டாயோ
அன்றித்தான் நானுன்னைக் கண்டேனே - என்ருல்
அருமாயை ஈன்றவள்தன் பங்கனையார் காண்பார்
பெருமாயைச் சூழல் பிழைத்து.

இன்று நீ என்னை உடம்பு வழியாகப் பார்த்தும் அதனின் வேருகக் கண்டது உண்டோ? அவ்வாறே நானும் உன்னைக்

கண்டேனே? இல்லையே. அங்ஙனமாயின் மாயைப் பெரு மறைப்பிற்கு அப்பாற்பட்ட இறைவனை அவன் காட்டுவித்தா லன்றிக் காண்பார் யார்? (89)

கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றுங்
கடலளக்க வாராதாற் போலப் - படியில்
அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்
கருத்துக்குச் சேயனாய்க் காண்.

கடலிலே அலைகளால் அலைப்புறுது ஆடும்படி நின்றவர்க் கும் கடலின் ஆழத்தையும், அகலத்தையும் அளத்தலரிது. அதுபோல முதல்வன் அன்பரை ஆண்டவிடத்தும் அம் முதல்வன் உயிரின் கருத்தால் அளவிடப்படுதற்கு அரியன் என்றுணர்க. (90)

சிவனெனவே தேறினன்யான் என்றமையால் இன்றும்
சிவன்அவனி வந்தபடி செப்பில் - அவனிதனில்
உப்பெனவே கூர்மை உருச்செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டாய் அவன்.

சிவனெனவே தேறினன் யான் என்று மாணிவாசகர் அவனிமீது வந்த பெருமானைக் கூறினரல்லரோ எனின், கடல் நீரின்கண் உப்பானது நிறைந்து உருக்கொண்டமை போல இறைவனும் ஆசிரியனாக அருளாலே திருமேனி கொண்டான் என்றறிக. (91)

அவனிவனாய் நின்ற(து) அவனருளால் அல்ல(து)
எவனவனாய் நிற்கின்ற தேழாய் - அவனிதனில்
தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய்
ஈன்றிடுமோ சொல்லாய் இது.

இறைவன் தனது திருவருளால் ஆசிரிய வடிவங்கொண்டு நிற்கின்றான் என்று அறிக. இறைவன் அருளுருக் கொண்டு

ஆசிரியனை அதிட்டியாவிடத்தே, ஆசிரியனுகிய உயிர் யாதொரு பயனையும் நல்காது. மரம் பலனளிப்பதன்றி மரத்தைப்பற்றிய புல்லூரி மரத்தின் பலத்தைக் கொடுக்க வல்லதோ ? (92)

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்(து)
அத்தி பழுத்த தருளென்னுங் - கத்தியினுல்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடியெழுங்காண் இன்று.

வீடு பெறுதற்குரிய உயிரென்னும் கொடிமீதே ஆணவமான கொடிபடர்ந்து உடம்பென்னும் பழம் பழுத்தது. அவ்வாணவக் கொடியை அருளென்னும் கத்தியினுல் அறுக்கவே முத்தியெனும் பழம் பழுத்தற்குரிய சிவமாகிய ஒரு தனிக்கொடி விளங்கித் தோன்றும். (93)

அகளத்தில் ஆனந்தத் தானந்தி யாயே
சகளத்தில் தையலுடன் தோன்றி - நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான் தன் பொன்னடிஎன் புன்தலைமேல்
ஆக்குவதும் செய்தான் அவன்.

இறைவன், ஆசிரியன் திருமேனியின்பால் அருட்சத்தி யோடும் தோன்றி, குற்றமற்ற அருள்வெளியிலுள்ள பரமானந் தத்தை நல்கும் வடிவுடன் இருந்து, எனது விலங்காகிய ஆணவத்தைத் தொலேத்துத் தன் பொன்னடியை என் புன் தலேமேல் வைத்தனன். (94)

குற்றமறுத் தென்னையாட் கொண்டருளித் தொண்டனேன்
உற்ற தியானத் துடனுறைவார் - முற்றவரின்
மாட்சியுமாய் நிற்பார்யான் மற்றென்றைக் கண்டிடின்அக்
காட்சியுமாய் நிற்பார் கலந்து.

இறைவர் என் குற்றமாய பாசங்களைஅறுத்து, என்னை ஆட் கொண்டு, என் நினைவுடன் நினைவாய் நின்று, நினைவு முற்றிய

இடத்திலே பேரானந்தமயமாய் நிற்பர்; நான் வேறு எதனைக் காண்கினும் அக்காட்சிப் பொருளிலேயும் நிற்கின்றார். (95)

ஆளுடையான் என்தரமும் ஆளுடையா னேஅறியும்
தாளுடையான் தொண்டர் தலைக்காவல் - நாளும்
திருவிசலூர் ஆளுஞ் சிவயோகி இன்றென்
வருவிசையை மாற்றினான் வந்து.

திருவியலூரினை உடைய சிவயோகியாகிய ஆளுடையான் என்னும் திருநாமமுடையான், எம்போலியரையும் ஆட்கொள்ளும் கருணை உடையவன். அடியாரைக் காப்பாற்றும் தலைவன். இப்போது பிறவியில் உழலும் எனது வேகத்தை மாற்றித் திருவடியின்கீழ் என்னை வைத்தான். (96)

தூலத் தடுத்த பளிங்கின் துளக்கமெனத்
தூலத்தே நின்று துளங்காமல் - காலத்தால்
தாளைத்தந் தென்பிறவித் தாளை அறவிழித்தார்க்(கு)
ஆளன்றி யென்மா றதற்கு.

பலவகைத் திண்ணிய நிறப்பொருள்களைக் கலந்து தன்னொளி விளங்காதிருக்கும் படிகம்போல மாயைப் படைப்புகளிலே பொருந்தி அலமராவண்ணம், பக்குவகாலத்தே தன் திருவடிகளைத் தந்து என் பிறவிவேரை அறவே கெடுத்தார்க்கு நான் அடிமையாயிருத்தலன்றி வேறு யான்செய்யும் கைம்மாறு யாது? (97)

இக்கணமே முத்தியினை எய்திடினும் யான்நினைந்த
அக்கணமே ஆனந்தம் தந்திடினும் - நற்கணத்தார்
நாயகற்கும் நாயகிக்கும் நானடிமை எப்பொழுதும்
ஆயிருத்த லன்றியிலேன் யான்.

இப்போதே இறைவன் வீட்டினை அளிப்பினும், நான் அதனை விரும்பி நினைந்தபோதே ஆனந்தம் அளித்திடினும்,

அடியார் தலைவனுக்கும் தலைவிக்கும் நான் எப்போதும் அடிமையாயிருத்தலையன்றி வேறறியேன். (98)

என்னை உடையவன்வந் தென்னுடனுய் என்னளவில்
என்னையுந்தன் ஆளாகக் கொள்ளுதலால் - என்னை
அறியப்பெற் றேன்அறிந்த அன்பருக்கே ஆளாய்ச்
செறியப்பெற் றேன்குழுவிற் சென்று.

என்னை எப்போதும் உடைமையாக உடைய பெருமான் வந்து என்னுடன் கலந்து என்னறிவளவில் என்னைத் தன் அடிமையாகக் கொண்டமையால், என்னை நான் அறியப் பெற்றேன். தம்மை அறிந்த பேரன்பர்க்கு அடிமையாய் அவர் கூட்டத்தில் சேர்ந்து ஒழுகப்பெற்றேன். (99)

சிந்தையிலும் என்றன் சிரத்தினிலும் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநான் வாராமல் - தந்தவனை
மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவேன் யான்.

என் உள்ளத்திலும் என் சென்னியிலும் திருவடிவைத்து ஆட்கொள்ளவந்தபெருமானை, மீண்டும் பிறவாதநிலை தந்தவனை அவனது திருவருட் சக்தியுடன் எப்போதும் எவ்விடத்தும் அவன் வாழ்ந்தருள்க என்று வாழ்த்துதலன்றி வேறு எது சொல்லி அவனை நான் இப்போது வாழ்த்த முடியும்? (100)

திருக்களிற்றுப்படியார்

உரைநடையுடன்

முற்றிற்று.

தனி வெண்பா

ஆதார மாகி அருளோடு நிற்கின்ற
சூதான இன்பச் சுகவடிவை — ஓதாமல்
உள்ளவர்கள் கூடி உணர்வொழிய நிற்பதலால்
தெள்ளவா ராதே சிவம்.

சிறப்புப்பாயிரம்

பொருளும் மனையும் அறமறந்து போக மறந்து புலன்மறந்து
கருவி கரண மவைமறந்து கால மறந்து கலைமறந்து
தரும மறந்து தவமறந்து தம்மை மறந்து தற்பரத்தோ(டு)
உருகி உருகி ஒருநீர்மை யாயே விட்டார் உய்யவந்தார்.